பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 12 புதன்கிழமை 27.11.2024 கதிர் 020

## இனி இது ரகசியம் அல்ல!

தேர்தலுக்கு முன்னர் தமிழ் அரசுக் கட்சிக்குள் நிகழ்ந்து வந்த அக்கப்போர் தேர்தலுக்குப் பின்னர் மெல்ல அடங்கிவிட்டது. தேசியப் பட்டியல் மூலம் சுமந்திரன் ☞2

# வட - கிழக்கில் இன்று மாலை எழுச்சி மிகு நினைவேந்தல்

## அச்சுறுத்தல் இன்றி ஏற்பாடுகள் அனைத்தும் தயார்

போர் நிறைவுக்கு வந்த பின்னர் எழுச்சியான மாவீரர் தின நினைவேந்தலுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ்ப் பிரதேசங்கள் பெருமெடுப்பில் இன்று தயாராகி உள்ளன. முக்கிய நகரங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு மாவீரர் தினத்தையொட்டிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. மாவீரர் துயிலும் இல்லங்கள் இதற்காக அலங்கரிக்கப்பட்டுள்ளன. துயிலுமில்லங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்களில் பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று மாவீரர் நாள். ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக போராடித் தமது உயிரை ஈகம் செய்த போராளிகளை ☞7

# உறவுகளின் நினைவேந்தலுக்கு தடையேதுமில்லை தடைசெய்யப்பட்ட அமைப்பை நினைவுகூரமுடியாது

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு எந்தவொரு தடையும் இல்லையென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் போது செய்தியாளர் ஒருவரினால் மாவீரர் தினம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29 அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, தீவிரவாத மற்றும் தடைசெய்யப்பட்ட அமைப்பொன்றுக்காக நிதி சேகரித்தல், ஒன்று கூடுதல், பிரசாரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தடைசெய்யப்பட்ட அமைப்பின் கொடி, இலச்சினை மற்றும் கீதம் ஆகியவற்றினைபயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமையவே, நாம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்படி, தடைசெய்யப்பட்ட ☞7

### நாடாளுமன்ற

## கட்சித் தலைவர்களின் முதல் கூட்டம் நடந்தது

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

டிசம்பர் 3 முதல் நாடாளுமன்ற வாரத்தை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் இதன்போது இணக்கம் காணப்பட்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட ☞7

# காரைதீவு – சம்மாந்துறை வீதியில் வெள்ளம் அடித்துச் சென்ற 7 மாணவரை காணோம்

## இரவிரவாகத் தேடும் பணி தீவிரம்

கிழக்கில் பலத்த காற்றுடன் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 7 மாணவர்கள் உட்பட 8 பேர் காணாமற்போயுள்ளனர். காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று நிந்தவூர் மதரஸாவைச் சேர்ந்த மாணவர்களை ஏற்றிச் சென்ற உழவுஇயந்திரம் ஒன்று வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டதால் இந்தப் பேரிடர் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் அடித்துச் செல்லப்பட்ட டிராக்டரில் இருந்த மாணவர்களில் இருவர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். மற்றவர்களைத் தேடும்பணி பொலிஸார் மற்றும் படையினரின் உதவியுடன் இரவிரவாகத் தொடர்ந்தன.

மாணவர்களை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் காரைதீவு - சம்மாந்துறை வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது, வீதியின் மேலாக ஓடிய வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக காரைதீவுப் ☞2

## வரவு செலவுத் திட்டம் ஜன. 9இல் சமர்ப்பிப்பு

2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் ஜனவரி 9 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதன் இரண்டாம் வாசிப்பு ☞2

## அவசர நிலைமைக்காக தனிப் பொலிஸ் பிரிவு

### கொழும்பு தலைமையகத்தில்

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமைகள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கும் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை ☞7

## புதிய அரசமைப்பு பற்றி ஜனாதிபதி வெளிப்படையாகக் கூறவேண்டும்

### முன்னாள் எம்.பி. வீரசேகர வலியுறுத்து

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து அரசின் நிலைப்பாட்டை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படையாக குறிப்பிட வேண்டும். தேர்தல் அறிக்கையில் ஒன்றை குறிப்பிட்டுவிட்டு நடைமுறையில் பிறிதொன்றை செயற்படுத்துவது முறையற்றது என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலானஆளும்தரப்பின் குறை, நிறைகளை, இரண்டுமாத காலத்துக்குள் மதிப்பிட முடியாது. உரிய காலவகாசம் வழங்க வேண்டும். நாட்டு மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து ☞7



## வெள்ளத்தில் மிதக்கும் கிழக்கு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில், இடைவிடாது தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை மற்றும் காற்று காரணமாக, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

**அம்பாறை மாவட்டம்**

அதன்படி, சீரற்ற காலநி ☞2

## கனமழை, வெள்ளத்தால் 77 ஆயிரம் பேர் பாதிப்பு

நாடு முழுவதும் பெய்து வரும் கடும் மழை காரணமாக 22,532 குடும்பங்களைச் சேர்ந்த 77ஆயிரத்து 670 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (டிஎம்சி) தெரிவித்துள்ளது.

15 மாவட்டங்களில் உள்ள 103 பிரதேச செயலகப் பிரிவுகளில் 22 ஆயிரத்து 532 குடும்பங்களைச் சேர்ந்த 77 ஆயிரத்து 670 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உதவிப் பணிப்பாளர் ஜனகஹந்துன்பதிராஜா ☞2

## வெளிநாட்டு முதலீடுகளுக்கு உதவ ஆசிய வங்கி ஆர்வம்

அரசின் முறையான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் அந்த முதலீட்டு வாய்ப்புக்களுக்கு உதவிகளை வழங்குவது குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி கவனம் செலுத்தியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ஜீ. என். ஆர். டீ. அல்போன்ஸ் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய வலுசக்தி, நவீன விவசாயம் மற்றும் காலநிலை ☞7

## வடக்கில் ஒரு லட்சம் பேர் பாதிப்பு

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 25 ஆயிரம் வரையான குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேர் வரையில் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இரணைமடு, முத்தையன்கட்டு போன்ற குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டதன் காரணமாக தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அதிக பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் அதிகம் பாதிப்புக்களைச் சந்தித்த மாவட்டமாக மன்னார் ☞2

## இனி இது .....

நாடாளுமன்ற உறுப்பினராகிவிடுவாரோ என்கிற சந்தேகத்தில், அதனை வைத்து அரசியல் செய்வதற்கு முயன்றவர்களுக்கும் இடமளிக்காமல் தனக்கு அந்தப் பதவி வேண்டாம் என்று கூறிவிட்டு சுமந்திரன் சென்றுவிட்டதால் வெறுவாய் மெல்ல வேண்டிய நிலை.

அதற்கு எதிர்மாறாக பதிலாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் பூகம்பங்கள் வெடிக்கத் தொடங்கியிருக்கின்றன. தேர்தலுக்குப் பின்னர் ரெலோவுக்குள் தலைமைமாற்றம்வேண்டும்என்கிறகிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதனை அடக்கி பதவிகளை தம்மிடமேவைத்திருக்கவிரும்பும்"வாழ்நாள்" தலைவர்கள், எதிராளிகளை கட்சியைவிட்டு ஒழித்துக்கட்டிவிடத் துடிக்கிறார்கள். இன்று அதற்காக அவர்கள் நாள் குறித்திருந்தாலும் அந்தக் களத்தில் தமக்குப் பலம் இல்லை என்பதால்ரெலோவின்பொதுக்குழுவையோ மத்தியகுழுவையோஅவர்கள்கூட்டவில்லை.

இந்தஇரண்டுகுழுக்களில்ஒன்றையாவது உடனடியாகக் கூட்டு என்று உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு செயலாளரோ தலைவரோபொருளாளரோபதிலளிக்கிறார்கள் இல்லை. தமிழ் அரசுக் கட்சியின் உட்கட்சிப் பூசல்கள் குறித்து முந்திக்கொண்டு கருத்துத் தெரிவிப்பவர்கள் தமது கட்சிக்குள் என்றதும் வாயை மூடிக்கொண்டிருக்கிறார்கள் பதில் சொல்லாமல். எப்படியிருந்தாலும் பொதுக் குழு, மத்திய குழுவைக் கூட்டி சொந்தச் செலவில் சூனியம் வைத்துக்கொள்ள ரெலோ தலைவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதால் விரைவில் இந்தக் கூட்டங்கள் நடப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு என்றே நினைக்கின்றேன்.

விடயத்தை இப்போதைக்கு ஆறப்போட்டுவிட்டு, அடுத்த தேர்தலையொட்டி திடீரென எதிராளிகளை கட்சியைவிட்டுத் தூக்கி எறிய அவர்கள் திட்டமிடக்கூடும் என்று எதிர்பார்க்கின்றனர் கட்சியின் கிளர்ச்சியாளர்கள்.

ரெலோவின்பிரச்சினைஇப்படிப்போனால், புளொட்டுக்குள்ளும் புதிய பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 18 வாக்குகளால் ஓர் ஆசனம் கிடைக்காமல் போனது என்று ஒரு கதை உலாவுகின்றது. அது புளொட் சொந்தச் செலவில் வைத்துக்கொண்ட சூனியம் என்பதுதான் இப்போது புதுத் தகவல். அந்தப் 18 வாக்குகளையும் இல்லாமலாக்கியதிலும் தேசிய மக்கள் கட்சியையும் யாழ்ப்பாணத்தில் வெல்ல வைத்ததிலும் புளொட்டுக்கும் பங்கிருக்கின்றது என்கிற விடயம்தான் கட்சிக்குள் இப்போது பூதாகாரமாகக் கிளம்பத் தொடங்கியுள்ளது.

பொதுத் தேர்தலில் புளொட்டின் வெளிநாட்டு உறுப்பினர்கள் பலர் தேசிய மக்கள் சக்திக்காகப் பணியாற்றினார்கள் என்பதுதான் புதிய தகவல். இதற்காகவே புளொட் உறுப்பினர்கள் பலர் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்திருந்தார்களாம். தேர்தல்களின்போது இப்படி வருவது புளொட் உறுப்பினர்களின் வழக்கம்தான். ஆனால், அவர்கள் சித்தார்த்தனின் வெற்றிக்காக இங்கு வேலை செய்வார்கள். அவர்களில் பலர் வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றவர்கள் என்பதாலும் அவர்கள் பகிரங்கமாக தேர்தல் பணிகளில் ஈடுபடமுடியாத என்பதாலும் சித்தார்த்தனின் தேர்தல் பின்புலப் பணிகளில்தான் அவர்களின் பங்களிப்பு இருக்கும். இதனால் அவர்களின் பங்களிப்புபெரியளவில்மக்களுக்குத்தெரியும் வகையில் இருப்பதில்லை. ஆனால் புளொட் அமைப்போடு நெருங்கிப் பழகுபவர்களுக்கு இதுநன்குதெரியும். பரப்புரைத்திட்டங்களிலும் நிதி திரட்டலிலும் அவர்களின் கணிசமான பங்களிப்புநிச்சயமாக இருக்கும். 2015, 2020 பொதுத் தேர்தல்களில் இப்படி புளொட்டின் பல வெளிநாட்டு உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வந்து நின்று சித்தார்த்தனின் வெற்றிக்காக உழைத்துள்ளார்கள்.

இந்தத் தடவை அவர்களில் பலர் சித்தார்த்தனுக்காக அன்றி தேசிய மக்கள் சக்திக்காகவே பணியாற்றினார்கள் என்பது இப்போது புளொட்டுக்குள் புகைச்சலைக் கிளப்பியுள்ளது. சித்தார்த்தன் தேர்தலில் தோற்று தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் வெற்றி பெற்ற நிலையில் இந்தப் பிரச்சினை மெல்ல வெடிக்கத் தொடங்கியுள்ளது.

புளொட்டுக்கும்ஜேவிபிக்கும்பூர்வஜென்மத் தொடர்புகள் உண்டு. ஜேவிபிக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியது தொடங்கி அந்தப் பந்தம் நீண்டது. இப்போதும் இ-ரு தரப்பினருக்கும் இடையில் இந்தத் தொடர்புகள் நீடிக்கின்றன. அதனால் வெளிநாடுகளில் புளொட்டுக்கு வழக்கமாகத் தேர்தல் நிதி வழங்குபவர்களில் அரைவாசிப் பேர் இந்தமுறை தேசிய மக்கள் சக்திக்குத்தான் நிதி வழங்கினார்கள் என்றும் தகவல். இது தவிர வந்து நின்று வேலை செய்தவர்களில் நேர்வே ராஜன் என்பவரின் பெயர் பரவலாக அடிபடுகின்றது. இன்னும் பலரது பெயர்களும் வெளிவரும் என்கிறார்கள்.

புளொட்டுக்குள்இந்தப்பிரச்சினைவெடிக்கத் தொடங்கியிருக்கும் நிலையில் தேசிய மக்கள் சக்தியை வடக்கில் வெல்ல வைத்தவர்கள் யார் என்கிற குற்றச்சாட்டுக்குள்ளும் புளொட் சிக்கிக்கொள்ளப் போகின்றது. தோல்விக்காக அழுவதா அல்லது தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக மகிழ்வதா என்று தெரியாத திரிசங்கு சொர்க்கத்தில் சிக்கியுள்ளார் சித்தர்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வெள்ளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

ஐ.எம்.நஸ்ரிப், எப்.எம்.நசீன், எம்.ஏ.எம்.அஃப்கான், எவ்.எம்.சஹாரன், எம்.ஜே.எம்.சாதிர், ஏ.எம்.யாசின் ஆகியோர் காணாமற்போனவர்களில் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் உழவு இயந்திரத்தில் வீடுகளுக்குச் சென்ற இம்மாணவர்கள் காரைதீவு - சம்மாந்துறை வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் பயணித்தபோது மாலை 5.00 மணியாகியிருந்தது. அப்போது வீதியின் குறுக்கே மூன்றரை முதல் நான்கு அடிவரை தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்தது. அதனைத் தாண்டிச் செல்ல டிராக்டர் முயன்றபோது, தண்ணீரின் வேகத்தில் அது இழுத்துச் செல்லப்பட்டது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீரில் அடித்துச் செல்லப்பட்ட மாணவர்கள் அனைவரும் 12 முதல் -16 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். உழவு இயந்திரத்தில் பயணித்த இரண்டு மாணவர்கள் உயி-ருடன் காப்பாற்றப்பட்டுள்ளனர், எஞ்சியவர்களைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதலில் நேற்று நள்ளிரவு வரை பொலிஸார், கடற்படை மற்றும் தரைப் படையினர் ஈடுபட்டனர்.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டமும், அடுத்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டமும் காணப்படுகின்ற போதும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் சகல நீர்த்தேக்கங்களும் நிரம்பியுள்ள நிலையில் மழை தொடர்வதால் சகல பிரதேசங்களும் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகின்றது.

## கனமழை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆறு வீடுகள் முழுமையாகவும் 265 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அனர்த்தம் காரணமாக 821 குடும்பங்களைச் சேர்ந்த 2,770 பேர் 35 பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## வரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி 17, மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 27 முதல் மார்ச் 21 வரையிலும் நடைபெறவுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையிலும், பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுகின்ற வகையில் அபிவிருத்தியின் ஆரம்பப்படிமுறைகளைமேற்கொள்வதற்கான வரவு செலவுத் திட்டமாக 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குப் புதிய அரசு எதிர்பார்க்கின்றது.

அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள செலவீன மட்டுப்பாடுகளுக்கிணங்க, அரச கொள்கை வரைபுக்கமைய, அமைச்சின் விடயதானங்களின் கீழ் அந்தந்த அமைச்சுக்களால் அடையாளங்காணப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் அனைத்து அமைச்சுக்களிலிருந்தும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2025.01.09 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பின்னர் இரண்டாம் வாசிப்பு (வரவு செலவுத்திட்ட விவாதம்) 2025.02.17 அன்று நடத்துவதற்கும், மூன்றாம் வாசிப்புக்கான வரவுசெலவுத்திட்ட விவாதத்தை 2025.02.27 அன்று தொடக்கம் 2025.03.21 அன்று வரை நடத்துவதற்கு இயலுமாகும் வகையில் 2025 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## வெள்ளத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லையால் அம்பாறை மாவட்டத்தில் 4,000 குடும்பங்களைச் சேர்ந்த 14,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதிக்கப்புக்குள்ளாகியுள்ளதாக அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர் எஸ்.ஜெகராஜன் தெரிவித்தார்.

தொடரும் மழை காரணமாக இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் பல பகுதிகளில் போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளதாக அவர் கூறினார்

இவ்வாறு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக மீட்டு, பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தற்காலிக முகாம்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களில் நேற்று (26) பெய்த அடைமழை காரணமாக மீனவர்களின் மீன்பிடி வாடிகள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் கடற்கரை பிரதேசம் வெள்ளக் காடாக காட்சியளித்தது.

இதனால் அட்டாளைச்சேனை புறத்தோட்டம் பகுதியிலுள்ள மக்கள் முற்றாக இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கும் அவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்குமான நடவடிக்கைகளை அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் மற்றும் பிரதேசசபை இணைந்து மேற்கொண்டுள்ளது.

இதனால் தமது வள்ளங்கள், தோணிகள், வலைகள், உட்பட இயந்திரங்களும் பெரும் சேதங்களுக்குள்ளாகியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அட்டாளைச்சேனை கோணாவத்தை கடற்கரைப் பிரதேசத்தில் கரைவலை மற்றும் ஆழ்கடல் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின், சுமார் 50 க்கும் மேற்பட்ட வாடிகள் அடைமழை மற்றும் காற்று காரணமாக சேதமடைந்துள்ளமையினால் 400 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன், கல்முனை மாநகரையும் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராமங்களையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதியிலும் வெள்ளநீர் கரைபுரண்டு ஓடுவதனால் இவ் வீதிகளினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

அத்துடன், அவசர தேவையின் நிமித்தம் படகுகள் மூலம் பயணிக்க முடியாத அளவுக்கு இராட்சத முதலைகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள துறைவந்தியமேடு கிராமத்திற்குச் செல்லும் துறைநீலாவணை ஊடான வீதி சேனைக்குடியிருப்பு ஊடான வீதியூடாகவும் மழை வெள்ள நீர் பெருக்கெடுத்துள்ளது.

அத்துடன், பலத்த காற்றுடன் மழை காரணமாக, நிந்தவூரில் பிரதான வீதியோரங்களில் காணப்படும் மரங்கள் முறிந்து வீழ்ந்து போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேச செயலக பிரிவுகளின் தாழ்நில பிரதேசங்களிலுள்ள வீடுகள், அரச நிறுவனங்கள் மற்றும் வியாபார தலங்களுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இறக்காமம் நன்னீர் மீனவர்களின் மீன்பிடி வள்ளங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், இறந்த பாம்புகள் கரை ஒதுங்குவதனால் அப் பகுதி மக்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, இறக்காமம் கமநல சேவைகள் மத்திய நிலையத்திற்குச் சொந்தமான மஜீத் வாவியிலிருந்து மேலதிக நீர்வெளியேறிவருவதுடன் குறித்த வாவியின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, சூறாவளி உருவாகி கல்முனையை தாக்கும் என்று பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாமென அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தெரிவித்துள்ளார். சூறாவளியொன்று உருவாகும் பட்சத்தில் அது தொடர்பாக மக்களுக்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் உடனடியாக அறிவிக்கும் எனவும் அவர் வலியுத்தியுள்ளார்.

### மட்டக்களப்பு மாவட்டம்

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைவிடாது பெய்து வரும் பலத்த மழை காரணமாக, தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் அப் பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு, உறவினர் வீடுகளுக்கும் பொதுக் கட்டிடங்களுக்கும் இடம்பெயர்துள்ளனர்.

அத்துடன், தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் குளங்கள் நிரம்பி வழிவதுடன் மட்டக்களப்புவாவியின் நீர்மட்டம் கணிசமான அளவு உயர்வடைந்துள்ளது.

இதனால், வெல்லாவெளிக்கும் உறுகாமத்துக்கும் இடையிலான வீதியில், வெள்ளநீர் கரைபுரண்டு ஓடுவதுடன் இவ்வீதியுடனான போக்குவரத்தும் முற்றாக பாதிக்கப்படைந்துள்ளது.

இதனிடையே, பலத்த காற்றுடன் கூடிய அடைமழை காரணமாக, மட்டு மாவட்ட பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள மட்ஃபட்ஃதுறைநீலாவணை சித்தி விநாயகர் வித்தியாலயத்திலிருந்த பாரிய விருட்சம் வேருடன் சரிந்து வீழ்ந்துள்ளது.

### திருகோணமலை மாவட்டம்

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நேற்று (26)வரையான காலப்பகுதியில், 623 குடும்பங்களைச் சேர்ந்த, 1,789 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட பிரதி பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அடைமழை காரணமாக சில இடங்களிலும் வயல்நிலங்களிலும் வெள்ளநீர் தேங்கியுள்ளது.

தம்பலகாமம் கோயிலடி பகுதியை அண்டிய வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளமையினால், நெற் செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், வீதிகளில் தேங்கி காணப்படும் வெள்ளநீர் வழிந்தோடுவதற்காக

தொடர்ச்சி 7ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# குறைநிரப்பு மதிப்பீட்டை சமர்ப்பிப்பதற்கு அனுமதி

## குறைநிரப்பு மதிப்பீட்டை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2024ஆம் ஆண்டின் தொடர்ந்து வரும் காலத்தில் ஒரு சில அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்கீடு செய்வதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகள் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அதற்கிணங்க, அடையாளம் காணப்பட்டுள்ள ஒருசில செலவுகளை 2024 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டுக்கு உட்பட்ட வகையில் நிதியொதுக்கீட்டை ஏற்பாடு செய்வதற்கு இயலுமை காணப்படுவதுடன், 2024ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டுச்சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த செலவு எல்லையை விஞ்சாத வகையிலும் மற்றும் அரசு கடன்பெறும் உயர்ந்தபட்ச எல்லைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த இணக்கங்களை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளது.

அதற்கமைய, கீழ்க்காணும் பணிகளுக்காக 2 இலட்சத்து 19 ஆயிரத்து 373 மில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1. இலங்கை அரச ஐந்தொகைக்கு மாற்றப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன் மீள்கட்டமைப்பு காரணமாக வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ள வட்டிச் சலுகைக் கொடுப்பனவுகளுக்காக அரசதொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு 130,000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

2. டொலருக்கு எதிராக ரூபாய் பலம்பொருந்தியதாக மாறியமையால் திறைசேரி பிரதிச்செயலாளரின் பெயரிலுள்ள டொலர் கணக்குகளில் காணப்படுகின்ற மீதியின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள வெளிநாட்டுச் செலாவணி நட்டத்தை கணக்கு வைப்பதற்காக 18,000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

3. சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட வட்டி வீதம் வழங்கப்பட்டமையால் வங்கிகள் செலுத்தியுள்ள மேலதிக வட்டியை ஈடுசெய்து கொள்வதற்காக அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு 32,641 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

4.சீன அரசின் நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைத் துணியின் பெறுமதியைக் கணக்கு வைப்பதற்காக கல்வி அமைச்சுக்கு 9,829 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

5. ஐக்கிய அமெரிக்காவின் நன்கொடையாக இலங்கை விமானப் படைக்குக் கிடைக்கப் பெற்றுள்ள 2 விமானங்களின் பெறுமதியைக் கணக்கு வைப்பதற்காகவும்,வரிசெலுத்துவதற்காகவும் இலங்கைவிமானப்படைக்கு 8,331 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

6. அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை செலுத்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 1,400 மில்லியன் ரூபபய்கள் ஒதுக்கீடு செய்தல்.

7. கடன் மீள்கட்டமைப்புச் செயன்முறைக்குரிய நிதி சட்ட ஆலோசனைகர்களுக்கு மத்திய வங்கியால் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை ஈடுசெய்வதற்காக நிதி அமைச்சுக்கு 3,213 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்வதற்காக.

8. சீன அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சிறியளவிலான மீனவர்களுக்கான சலுகைகளை வழங்குவதற்காக கிடைக்கப்பெற்றுள்ள உதவிகளைக் கணக்கு வைப்பதற்காக கடற்றொழில் அமைச்சுக்கு மேலதிக ஒதுக்கீடு செய்வதற்காக தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு 1,533 ஒதுக்கீடு செய்தல்.

9. ஜப்பான் அரசின் நன்கொடையாக சுகாதாரத் துறையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குக் கிடைக்கப்பெற்றுள்ள எரிபொருள் தொகையின் பெறுமதியை கணக்கு வைப்பத்தல் மற்றும் 5225.5 மில்லியன் ரூபா சுங்க வரியினை செலுத்த சுகாதார அமைச்சுக்கு மேலதிக ஒதுக்கீடாக வழங்க தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு 10,826 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்தல்.

10. பாடசாலை போசாக்கு வேலைத்திட்டத்திற்காகஒருமாணவனுக்காக நாளொன்றுக்கு செலவாகும் 85 ரூபாவை 110 ரூபாவாக அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சுக்கு மேலதிக நிதி ஒதுக்கீட்டுக்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு 1,800 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

11.இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சொத்துக்களை புனரமைப்புச் செய்வதற்கான நட்டஈடு செலுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதியொதுக்கீட்டுக்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு 400 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்தல்.

12. சிறைச்சாலைகள் திணைக் களத்தின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்கள் அதிகரித்துள்ளமை மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் உணவுப் பானங்களுக்கான செலவு அதிகரித்துள்ளமையால் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குத் தேவையான மேலதிக நிதியொதுக்கீட்டுக்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு 1,400 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

# இடைக்கால நிதி அறிக்கை தயாரிக்கவும் தீர்மானம்

நாட்டில் 2025 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான நிதி நிர்வாக நடவடிக்கைகளுக்கான இடைக்கால கணக்கீட்டு அறிக்கையை தயாரிப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. அத்தோடு 2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை ஜனவரி 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச்சட்டத்தின்மூலம் குறிப்பிடப்பட்டுள்ள செலவீன மட்டுப்பாடுகளுக்கிணங்க, அரச கொள்கை வரைபுக்கமைய, அமைச்சின் விடயதானங்களின் கீழ் அந்தந்த அமைச்சுக்களால் அடையாளம் காணப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் அனைத்து அமைச்சுக்களிலிருந்தும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் 21 புதிய நாடாளுமன்றம் கூடினாலும், 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசியல் யாப்பில் விதிக்கப் பட்டுள்ள படிமுறைகளைக் கையாள்வதற்கு போதியளவு நேரம் இல்லை. அதனால், 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச்சட்டத்தின் 23(1) உப பிரிவில் குறிப்பிட்டவாறு 2025ஆம் ஆண்டின் முதல் 4 மாத காலப்பகுதிக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் அரச சேவைகளை மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதற்காக இடைக்கால கணக்கீட்டு அறிக்கையைபாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த இடைக்கால கணக்கீட்டு அறிக்கை மீதான விவாதம் டிசெம்பர் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அதேவேளை அத்தியாவசிய பணிகளுக்காக 219.373 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப் பதற்காகநிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

# முத்தையன்கட்டு குளம் திறப்பு; மக்களே முன்னெச்சரிக்கை

முத்தையன்கட்டு நீர்த்தேக் கத்தில் இருந்து கூடுதல் தண்ணீர் வெளியேற்றப்பட உள்ளது. குளத்தின் கீழ் பகுதியில் உள்ள அனைவரும் - குறிப்பாக மன்ன கண்டல் பகுதியில் வசிப்பவர்கள் - முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு நேற்று மாலை விசேட அவசர அறிவிப்பு விடுத்தது.

நீர் வெள்ள அபாயம் காணப் பட்டால், உடனடியாக கிராம நிர்வாக அதிகாரியை (கிராம நிலதாரி) தெரியப்படுத்தி, பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ள படுவதாக முல்லைத்தீவுமாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

# தீரமடையும் தாழமுக்கம் சூறாவழியாக வளரலாம்

## காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை



நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண காலநிலை மேலும் தீவிரமடைந்து தென்மேல் வங்காள விரிகுடா பிரதேசத்தில் வலுவடைந்துள்ள தாழமுக்கமானது 27.11.2024ஆம் திகதியளவில் சூறாவளியாக வளர்ச்சிடையலாம் என காலநிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இந்நிலைமையுடன் நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, வடமேல், மத்திய மாகாணங்களில் மிகக் கடுமையான மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக எதிர்கூறப்பட்டுள்ளது.

இந்த அசாதாரண காலநிலையுடன் ஏற்படக்கூடிய இயற்கை இடர் நிலைமைகள் காரணமாக 2024 க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு எதிர்கொள்ள வேண்டியேற்படும் அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டு க.பொ.த. (உயர் தர) பரீட்சையை 2024 நவம்பர் 27, 28, 29 ஆகிய தினங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த பாடங்களை அத்தினங்களில் நடத்தாதிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது..

அதன்படி, இப்பரீட்சை 2024.11.30 ஆம் திகதியாகிய சனிக்கிழமை மீளவும் ஆரம்பிக்கப்படுவதுடன், அன்றைய தினத்திலிருந்து தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள பரீட்சை நேர அட்டவணைக்கு அமைய சாதாரணமாக பரீட்சை நடத்தப்படும்.

பரீட்சை நடாத்தப்படாதிருக்கும் 2024 நவம்பர் 27, 28, 29 ஆகிய தினங்களுக்குரிய பாடப் பரீட்சைகள் 2024 டிசெம்பர் 21, 22, 23 ஆகிய தினங்களில் நடாத்தப்படுவதுடன், அதற்குரிய திருத்தப்பட்ட நேர அட்டவணை உரிய காலத்தில் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எச்சரிக்கையோடு இருங்கள்

தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்ததாழ்வுமண்டலம்வடமேற்குதிசையில்நகர்ந்து ஆழ்ந்தகாற்றழுத்ததாழ்வுமண்டலமாக உருவாகிஅடுத்த 12 மணி நேரத்தில் தீவின் கிழக்கு கடற்கரைக்கு மிக அருகில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வாநிலை அவதானிப்பு நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் தாக்கத்தினால், தீவின் பல பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் கனமாக காணப்படுவதுடன், வடக்கு, கிழக்கு, ஊவா, வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் கடும் மழை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

இந்த நிலமைகள் காரணமாக இன்று வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே பெய்த மழையினால் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையிலும் குளங்கள் நிறைந்து வான் பாய்ந்து வரும் நிலையிலும் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம்.

வடக்கு, வடமத்திய, மத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது பலத்த காற்று வீசக்கூடும் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. எனவே முறிந்துவிடக்கூடிய பெரும் மரங்களையொட்டி வாழ்வோர் விழிப்போடும் பாதுகாப்போடும் இருப்பதும் அவசியம்.

மழைவெள்ளம், குளங்கள் வான் பாய்வது போன்றவற்றை வேடிக்கை பார்க்கவென செல்பவர்கள் பலர் எம்மத்தியில் உண்டு. அப்படியானவர்கள் மிகவும் அவதானத்துடனும் எச்சரிக்கையோடும் நடந்துகொள்ளவேண்டும். தேவையற்ற உயிரிழப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது.

குளங்கள் வான்பாயும்போது அவதானத்துடன் செயற்படுவதே சிறந்தது. நீராடுதல், வேடிக்கை பார்க்க கூட்டமாக செல்லுதல், மீன் பிடித்தல் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது.

அப்படியும் குளத்தை பார்வையிடச் செல்லும் ஆர்வம் உள்ளவர்கள் சிறுவர்கள், குழந்தைகளை அவதானமாக வைத்திருங்கள். வான் நீர் வழிந்து செல்லும் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருப்பதுடன், உங்கள் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்க ஏற்பாடு செய்யுங்கள்.

கடும் குளிருடனான வானிலை உள்ளமையால் குழந்தைகள், முதியவர்களின் உடல்நிலை தொடர்பின் அவதானமாக இருப்பதும் அவசியம். இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் கிராமசேவையாளருக்கு தகவல் வழங்குவதுடன், அயலவர்கள், அருகில் உள்ள காவல்துறையினர் அல்லது படையினரின் உதவியை நாடுங்கள். அவசர உதவி தேவைப்படின் 0777 391230 எனும் எனது தொலைபேசி இலக்கத்துக்கும் அழைப்பு ஏற்படுத்தி உதவி பெறுங்கள்.

இதுவரைக்கும் புயல் தொடர்பான எச்சரிக்கை விடப்படவில்லை, தற்போதைய காற்றழுத்த தாழ்வு நிலை புயலாக மாறி இலங்கைக் கரையை எட்டும் என்ற எதிர்வுகூறல்களும் இல்லை. அதனால் வதந்திகளை நம்பாமலும் பரப்பாமலும் அவதானத்தோடு இருப்பது அவசியம். அரச அறிவிப்புக்கள், அதிகாரிகளின் அறிவுறுத்தல்கள் என்பன குறித்து விழிப்போடு இருப்பதோடு எப்போதும் எச்சரிகிகையுடன் இருங்கள். பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ளுங்கள்.



# மாவீரர் தினம்

இலங்கைத் தமிழர் வரலாற்றிலிருந்து என்றுமே அழிக்க முடியாத நாளாக கருதப்படும் மாவீரர் தினம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27ஆம் நாள் நினைவுகூரப்படுகிறது.

விடுதலைப்புலிகளின்நிழல்ஆட்சிஅமைந்திருந்த காலப் பகுதியில் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் இந்த நாள் புலிகளின் துயிலுமில்லப் பிரிவினால் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தமிழ்த் தேசிய எழுச்சி நாளாக மேற்கொள்ளப்பட்டது. தமிழர் தாயக நிலப்பரப்பிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கம்அகற்றப்பட்டதன்பின்னர், 2009ஆம்ஆண்டு முதல் இந்த நாள் போரில் இறந்த உறவினர்களை நினைவுகூரும் தேசிய நாளாக மாற்றமடைந்து வருகின்றது. விடுதலைப் புலிகளின் அடையாளங்கள் அகற்றப்பட்டு தமிழர்களின் விடுதலைப் போரில் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கான நினைவு நாளாக இது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் நீடித்து உள்நாட்டு போரில் ஆளும்தரப்புடன் போரிட்டு உயிரிழந்த போராளிகள் இந்த நாளில் நினைவுகூரப்படுகின்றனர். இந்த நாளில், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து எஞ்சியிருக்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர் நாள் தீபம் ஏற்றுவதற்குரியவகையில்தயாாப்படுத்தப்பட்டிருக்கும்.

பொதுவாக மாலை 6 மணி 5 நிமிடத்திற்கு அக வணக்கதுடன் மாவீரர் தின அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாகும். அரை மணி நேரம் முதல் முக்கால் மணி நேரத்திற்கு நீடிக்கும். மாவீரர் நாளை ஒட்டி அந்த வாரம் முழுவதும் அதாவது நவம்பர் 21 முதல் 27 வரை மாவீரர் வாரமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. பொது இடங்கள், சந்திகளில் நினைவேந்தல்கள் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர் நாளுக்குரிய தயார்ப்படுத்தல்களும் அஞ்சலிகளும் இடம்பெறும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்தும் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான போராளிகள் உள்நாட்டுப் போரில் உயிரிழந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து உயிர்நீத்த முதல்போராளிலெப்டினன்சங்கர்எனஅழைக்கப்படும் சத்தியநாதன் வீரச்சாவடைந்த நவம்பர் 27 அன்றே மாவீரர் நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து உயிர்நீத்தவர்களின் உடல்கள் எந்தச்சந்தர்ப்பத்திலும் எதிர்த் தரப்பின் கைகளில் அகப்பட்டுவிடக்கூடாது என்பதோடு, உயிர் நீத்தவர்களை முழுமையான இராணுவ மரியாதைகளுடன் புதைப்பதோடு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு நடைமுறை இருந்து வந்தது.

1989ஆம் ஆண்டு தொடக்கம் மாவீரர் தினம் எனும் பெயருடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தங்களது உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27 மாவீரர் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றைய தினமே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரை 15 வருடங்களுக்கு முன்பு வரை இடம்பெற்று வந்தது.

2008ஆம் ஆண்டு மாவீரர் தினமே தமிழீழ விடுதலைப்புலிகளால்பெருளடுப்பில்அனுஷ்டிக்கப்பட்ட இறுதிமாவீரர்தினமாகஅமைந்தது. போரில்உயிரிழந்த விடுதலைப் புலிகளது உடல்கள் வித்துடல்கள் என அழைக்கப்பட்டன. துயிலுமில்லங்களில் அவை புதைகக்கப்பட்ட இடங்களில் கல்லறைகளுடன் கூடிய நடுகற்கள் நடப்பட்டிருக்கும். வித்துடல்களைப் பெறமுடியாத போராளிகளின் நினைவாக நடுகற்கள் மட்டும்நடப்பட்டிருக்கும். ஒருசீரிய ஒழுங்குமுறையில் பேணப்படும் இந்த நடுகற்களின் முன்பாக நின்று அவர்களின் உறவினர்கள் போராளிகளை நினைந்துருகுவர்.

போரில் இலங்கை அரச படையினர் வெற்றிபெற்றதன் பின்னர் இந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டன. அங்கிருந்த கல்லறைகள் நடுகற்கள் இடித்து அழிக்கப்பட்டன. துயிலுமில்லங்கள் இருந்த இடங்கள் உழுது தரைமட்டமாக்கப்பட்டன. இருப்பினும் இவற்றால் எல்லாம் மக்கள் மனங்களில் இருந்து போராளிகளின் அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் அகற்ற முடியவில்லை. அவர்கள் சாத்தியமான வழிகளில் எல்லாம் தொடர்ந்தும் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தி வந்தனர்.

6 வருடப் போராட்டத்தின் பின்னர் 2015ஆம் ஆண்டில் முதல் தடவையாக கெடுபிடிகள், நெருக்கடிகள் இன்றி மாவீரர் தினத்தை நடத்தும் அரசியல் சூழல் ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ரணில் - மைத்திரி கூட்டு ஆளும்தரப்பினால் மாவீரர் தினங்களுக்கான அனுமதி வழங்கப்படாவிட்டாலும் போரில் உயிரிழந்த உறவினர்களை நினைவேந்த தடை ஏதும் இல்லை, ஆனால் தடை செய்யப்பட்ட அமைப்பினை நினைவேந்துவதற்கு தடை என்று ஆளும்தரப்பின்பக்கமிருந்துவிளக்கம்வழங்கப்பட்டது.

இருப்பினும் இந்த விடயத்தில் ஆளும் தரப்பின் கொள்கை முடிவு தெளிவானதாக இருக்கவில்லை. அதனால் மாவீரர் தினங்களை நடத்துவதற்கு எதிராக பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவுகளைப் பெற முயன்றனர். சில சமயங்களில் தடை உத்தரவுகள் கிடைத்தன. பல இடங்களில் அவை நீதிவான்களால் மறுக்கப்பட்டன. எனினும் 2019 ஆட்சி மாற்றம் ஏற்பட்டு கோட்டாபய ஜனாதிபதியானதும் மீண்டும் மாவீரர் தினங்களுக்கு கெடுபிடிகள் அதிகரிக்கத் தொடங்கின. அவை விடுதலைப் புலிகள் அமைப்பை நினைவேந்தும் நிகழ்வுகள் என்ற வகையில் சித்தரிக்கத் தொடங்கின.

இலங்கையில் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்து தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக இருப்பதன் காரணத்தால் அதற்கு ஆதரவாகவோ, அந்த அமைப்பை நினைவுறுத்தும் வகையிலோ செயற்படுவது தவறு. இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மாவீரர் தினத்தை போராளி அமைப்பிலிருந்து உயிர்நீத்ததமது உறவுகளின் நினைவேந்தல் நாளாக மடைமாற்றம்செய்துவருகின்றனர். விடுதலைப்புலிகள் அமைப்பின் குறியீடுகள் அகற்றப்பட்ட இலங்கைச் சட்டங்களை மீறாத வகையிலானவையாக மாவீரர் தினங்கள் மடை மாற்றப்பட்டுள்ளன.

இலங்கையின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள பெரும் அரசியல்மாற்றத்தைத்தொடர்ந்து, இந்த ஆண்டுமடை மாற்றப்பட்டமாவீரர்தினத்தைகெடுபிடிகள்இன்றிநினை வேந்துவதற்கான வெளி ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு கிழக்கிலும் பொதுத் தேர்தலில் வெற்றி கிடைத்துள்ள நிலையில், போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்துவதற்கான தமிழ் மக்களின் சட்டத்திற்குட்பட்ட உரிமையைல் தலையிடுவதில்லை என்கிற கொள்கை முடிவை ஆளும் தரப்பு எடுத்திருப்பதன் விளைவாக, வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் மாவீரர் தினங்களைநடத்துவதற்கானவெளிதிறக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# 1988 – 89 கிளர்ச்சியில் கொல்லப்பட்ட ஜே.வி.பியினருக்கு நீதி வழங்கப்படும்

## நிஹால் அபயசிங்க எம்.பி தெரிவிப்பு



1988-89 கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட ஜேவிபியினருக்கு நீதி வழங்குவதற்கான முயற்சிகள் எதிர்காலத்தில் இடம்பெறலாம் என ஜேவிபி தெரிவித்துள்ளது.

1988-89 கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட ஜேவியினருக்கு நீதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்த பேச்சுகள் எவையும் தற்போது இடம்பெறாத போதிலும் எதிர்காலத்தில் இதற்கான முயற்சிகள் இடம்பெறலாம் என ஜே.வி.ப.ஸ்ரீ தெரிவித்துள்ளது.

மார்க்சிச இடதுசாரி கட்சியான ஜே.வி.பி. தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் பிரதான கட்சி.

இந்த நிலையில் 1988-89 ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தவர்களுக்காக நீதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெறுமா என்ற கேள்விக்கு இதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என ஜே.வி.பியின் பொதுச்செயலாளரும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி நிஹால் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து நாங்கள் இதுவரை விசேட பேச்சுகளை மேற்கொள்ளவில்லை. எனினும் அவசியமான பேச்சுகளை முன்னெடுப்போம் எனத் தெரிவித்துள்ள அவர், ஜே.வி.பி எங்கள் கூட்டணியின் முக்கிய உறுப்பினர், என்ன நடக்கவேண்டும் என்பது குறித்து அவர்கள் அவசியமான பேச்சுகளை மேற்கொள்வார்கள் என அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் அதேவேளை, ஆளும்தரப்பு என்ற வகையில் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தவேண்டியிருக்கும் என தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு வவுனியாவில் 2 நாள் விடுமுறை

சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனயா மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு நவம்பர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(100)



# நீதி அமைச்சின் செயலாளர் கடமையை பொறுப்பேற்றார்

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி அயெஷா ஜினசேன ஞாயிற்றுக்கிழமை தனது கடமைகளை நீதி அமைச்சில் பொறுப்பேற்றார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் 32 வருடகாலம் சேவை செய்த இவர், நீதி அமைச்சின் கடமைகளை பொறுப்பேற்பதற்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிசிட்டர் ஜெனரலாக செயற்பட்டு வந்தார்.

செயலாளர் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வில் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ரோஹண சப்புகஸ்கந்த, சட்ட வரைவாளர் ஜனாதிபதி சட்டத்தரணி தில்ருக்ஷி சமரவீர உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# கனமழையால் தம்பலகாமத்தில் நீரில் மூழ்கிய வயல் நிலங்கள்





சீரற்ற காலநிலையின் காரணமாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் நீரிழ் மூழ்கி நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்கனமழைகாரணமாகதம்பலகாமம் கோயிலடி பகுதியை அண்டிய வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் நெற் செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர தொடர் அடை மழை காரணமாக தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன குறிப்பாக முள்ளிப்பொத்தானை, மீரா நகர், பாலம் போட்டாறு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் அதிகளவான நீர் தேங்கி நிற்பதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது குறித்த பகுதிகளில் நீரை வெளியேற்ற தம்பலகாமம் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை இணைந்து பெகோ இயந்திரத்தை கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாலம்போட்டாறு கிராம சேவகர் பகுதியில் உள்ள பத்தினிபுர மக்கள் சில குடும்பங்கள் அருகில் உள்ள பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சகல ஏற்பாடுகளையும் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளதுடன் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஊடாக ஏனைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் போக்குவரத்து மற்றும் தடைப்படும் நீரை வெளியேற்ற சகல நடவடிக்கைகளும் பிரதேச செயலாளரின் வழிகாட்டுதளுக்கிணங்க அனர்த்தமுகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தரும் களத்தில் நின்று கடமையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புதுக்குடியிருப்பில் பலத்த மழை; வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் கடந்த மூன்று நாள்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் அப்பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட முடியாமல் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

புதுக்குடியிருப்பின் பல இடங்களில் வெள்ள நிலை காணப்படுவதாலும், வீடுகளுக்குள் வெள்ளநீர்புகுந்தமையாலும் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள், வர்த்தகர்கள் முதலான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக இடியுடன் கூடிய பலத்த மழை காரணமாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வெள்ள அபாய சிவப்பு எச்சரிக்கையை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முன்பாக தொடர்கிறது அறப் போராட்டம்




ஈ 8 விசாவில் தென் கொரியாவுக்கு தொழில் நிமித்தம் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள சிலர், அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக கொரியாவில் தொழிலுக்கு செல்ல இருந்த வாய்ப்பு இல்லாமல் போயுள்ளதாக தெரிவித்து, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு முன்னால் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டவந்தவர்களில் சிலரை அமைச்சர் விஜித்த ஹேரத் சந்தித்து கலந்துரையாடி இருந்தார். இதன்போது ஈ8 விசாவில் தென்கொரியாவுக்கு தொழிலுக்கு செல்வதை சட்ட ரீதியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

என்றாலும் தென்கொரியாவுக்கான தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளதை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியம் அதனை மறைத்து வருவதாகவும் இதனால் அவர்கள் தொழிலுக்கு செல்ல வேண்டிய காலம் நிறைவடைய இன்னும் சில நாள்களே இருப்பதால், காலத்தை நீடித்து வழங்குமாறு தெரிவித்தும் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் ஈ8 விசாவில் தொழிலுக்கு அனுப்புவது சட்டவிரோத செயல். அதனால் அதனை அனுமதிக்க முடியாது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் பணியகத்துக்கு தெரியாமல் விசா கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. தென்கொரியாவுக்கான தொழில் வாய்ப்பும் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிப்பதில் எந்த உண்மையும் இல்லை எனவும் பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பாக முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிடுகையில், ஈ8 விசாவில் தென்கொரியாவுக்கு தொழிலுக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசாங்கத்துடன் நாங்கள் கலந்துரையாடி இருந்தோம்.

அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து செயற்படுவதாகவே தெரிவித்திருந்தனர். என்றாலும் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. என்றாலும் தற்போது இந்த விடயத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தலையிட்டால் இந்தப் பிரச்சினைப்பு தீர்வுகாண முடியும். - என்றார்.

இருந்தபோதும் ஈ8 விசாவில் தென்கொரியாவில் தொழிலை எதிர்பார்த்துள்ளவர்களும். ஏற்கனவே கொரியாவில் தொழில் செய்துவிட்டு விடுமுறையில் வந்தவர்கள் மீண்டும் அங்கு செல்ல முடியாமல் இருப்பவர்களும் திங்கட்கிழமை மூன்றாவது நாளாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



# அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு பிறப்பிப்பு

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கியில் கடந்த 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிணைமுறிகள் ஏலத்தின்போது அரசாங்கத்துக்கு சொந்தமான 10 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமையால் ஏற்பட்ட நஷ்டம் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் முக்கிய சந்தேக நபராக அர்ஜுன மகேந்திரனின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## வெள்ளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர் பிரதேச செயலகம் தேவையான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தஅனர்த்தநிலைகாரணமாகஅன்றாடம் கூலி வேலைகள் செய்து ஜீவனோபாயத்தை நடத்திவரும் தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், இம் மாவட்டங்களிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பரீட்சைக் கடமைகளுக்குச் செல்லும் அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்களும் பலத்த அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை துரிதப்படுத்துமாறும், மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தேசிய மக்கள் சக்தி கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கேட்டுக் கொண்டுள்ளார்.

அனர்த்த நிலைமை தொடர்பாக, கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளை நேற்று (26) தொடர்புகொண்டு, பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான உதவிகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தி அஞ்சலி செலுத்தும் நாள். மக்களுக்காகத் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை இன்று உணர்வெழுச்சியுடன் நினைவேந்த தமிழர் தாயகம் தயார் நிலையில் உள்ளது.

வடக்கு, கிழக்கில் 25 இற்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள் மற்றும் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்கள் நினைவேந்தப்படவுள்ளனர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள், விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்கள் சிவப்பு, மஞ்சள், வர்ண கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு நினைவேந்தலுக்குத் தயார் நிலையில் உள்ளன.

இன்று மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட துயிலும் இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சமநேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

2009 போர் முடிவுக்கு வந்த பின்னர் கெடுபிடிகள், படையினர் மற்றும் பொலிஸாரின் கண்காணிப்பு இன்றி நினைவேந்தலை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்பு இந்த ஆண்டு ஏற்பட்டுள்ளதால் கடந்த காலங்களைவிட எழுச்சியுடன் நினைவேந்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் நிறைவேற வேண்டும்.

நாட்டின் ஒற்றையாட்சி, மற்றும் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் அவதானத்துடன் செயற்படுவோம். ஏனெனில் நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்கு நாங்கள் ஆயுதமேந்திப் போராடினோம். நாட்டுக்காக உயிர் நீத்த இராணுவ படைகளின் தியாகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஜனாதிபதி இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றுகிறார். 2015 முதல் 2019 வரை ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக முன்னெடுத்த பணிகளை நிறை-வு செய்வதாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சிக் காலத்தில் லால் விஜயநாயக்க தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்த புதிய அரசமைப்பு உருவாக்க வரைபு சமஷ்டியாட்சி உருவாக்கத்தை பரிந்துரைத்துள்ளது.

சமஷ்டியாட்சி அரசமைப்பின் அம்சங்களுடன் புதிய அரசியலமைப்பை உருவாக்கினால் ஒற்றையாட்சி யாப்பு இயல்பாகவே இரத்தாகும்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆளும் தரப்பு தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். தேர்தல் அறிக்கையில் ஒன்றை குறிப்பிட்டுவிட்டு, நடைமுறையில் பிறிதொன்றை செயற்படுத்துவது முறையற்றது. தேசியத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார்.

## கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தை டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய இரண்டு நாள் நடத்தவும் அதன் பின்னர் வாக்கெடுப்பு நடத்தவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கட்சிகள் மட்டுமின்றி எதிர்க்கட்சிகளின் கருத்துகளையும் மக்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பளிப்பதே அந்த இரண்டு நாட்களின் முக்கிய நோக்கமாகும்'

டிசம்பர் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் இடைக்கால வரவு செலவுத் திட்டம் தொடர்பான பிரேரணையை விவாதித்து பாராளுமன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க இணக்கம் காணப்பட்டது.

அந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஊடாக, 2025 ஏப்ரல் 30ஆம் திகதி வரை அரச அலுவல்களை நடத்த தேவையான நிதி அதன் மூலம் ஒதுக்கப்படவுள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டம் தொடர்பில் வாக்கெடுப்புக்கு செல்வதை எதிர்பார்க்கவில்லை என கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

## அவசர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்பதற்கும் இன்று (26) முதல் 24 மணிநேரமும் செயற்படும் வகையில் பொலிஸ் தலைமையகத்தில் விசேட செயற்பாட்டு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த விசேட பிரிவினை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவசரகால சூழ்நிலைகள், இடப் பெயர்வுகள் மற்றும் உதவிகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொலைபேசி இலக்கங்கள்
011-2027148, 011-2472757, 011 - 2430912, 011-2013051
மின்னஞ்சல் முகவரி
disaster.ops@police.gov.lk

## உறவுகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பின் கொடி, இலச்சினை, கீதம் ஆகியவற்றினை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கின்றோம்.

அதேநேரம், உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரும் நிகழ்வுக்கு இடையூறு விளைவிக்க ஆளும்தரப்புக்கு அதிகாரம் இல்லை. உயிரிழந்த உறவினர்களை நினைவுகூருவதும் தடை செய்யப்பட்ட அமைப்பொன்றை நினைவுகூருவதும் ஒன்றல்ல. ஆகவே இதனைக் குழப்பிக்கொள்ள வேண்டாம்.

உயிரிழந்த உறவினர்களை நினைவுகூருவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ள அதேநேரம் அரசால் தடைசெய்யப்பட்ட அமைப்பொன்றை நினைவுகூருவதற்கு எந்த வகையிலும் அனுமதி வழங்கப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தார்.

# ரஷ்ய ராணுவத்தில் மாட்டிக்கொண்டுள்ள எங்கள் பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள்

## வடக்கு ஆளுநரிடம் பெற்றோர் மன்றாட்டம்

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய இராணுவத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்த்ததாகக் கூறப்படுவது தொடர்பில் அவர்களது பெற்றோர்களால் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

தமது பிள்ளைகளை உடனடியாக மீட்டுத் தருமாறு ஆளுநரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம், கரவெட்டி, முள்ளியவளையைச் சேர்ந்த இளைஞர்களின் பெற்றோர்களே ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநரை நேரில் சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்தனர். பெற்றோர்களது கோரிக்கையை செவிமடுத்த ஆளுநர், உடனடியாக வெளிவிவகார அமைச்சின் செயலாளரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு விடயத்தைத் தெரியப்படுத்தினார்.

பெற்றோர்களிடம் அவர்களது விவரங்களைப் பெற்று வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களும், உறவினர்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர்கள், ரஷ்ய இராணுவத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு உயிராபத்தில் சிக்கித் தவிக்கும் எங்கள் உறவுகளை உடனடியாக மீட்டுத் தாருங்கள் என்று மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டனர்.

# ஊருக்குள் நுழைந்த முதலை உடுப்பிட்டியில் நேற்று பரபரப்பு

யாழ். உடுப்பிட்டி பகுதியில் மக்கள் குடியிருப்பினுள் நுழைந்த முதலையை இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

முதலையினை அவதானித்த மக்கள் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அத்துடன், நேற்று காலையில் முதலையை அந்தப் பகுதி இளைஞர்கள் மடக்கி பிடித்தனர்.

இதனையடுத்து, வல்வெட்டித் துறை பொலிஸாரினூடாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலையை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

# பாதுகாப்பு பிரதி அமைச்சர் இன்று வடக்குக்கு வருகை

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய கொழும்பில் இருந்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர உள்ளிட்ட குழுவினர் இன்று வடக்கிற்கு வருகை தருகின்றனர்.

நாட்டில் நிலவும் கன மழை காரணமாக பல மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கின் பாதிப்புத் தொடர்பில் நேரில் ஆராய வடக்கிற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர, அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் உதய ஹேரத் உள்ளிட்ட குழுவினர் இன்று வடக்கிற்கு வருகை தருகின்றனர்.

அவர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இணைந்து பணியாற்றுவார். வடக்கின் பாதிப்புக்கள் தொடர்பிலும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் அவர்கள் விசேட சந்திப்பிலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# திருகோணமலைக்கு வெள்ள எச்சரிக்கை

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று, கந்தளாய், கிண்ணியா, மூதூர், சேருவில, தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுகளின் தாழ்நிலப் பகுதிகளில் நேற்றும் காலை முதல் நாளை 28 ஆம் திகதி காலை 6.00 மணி வரையான காலப்பகுதியில் மழை வெள்ளம் ஏற்படவுள்ளது என்றும், எனவே இப்பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் இப் பிரதேசங்களுக்கு ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.பீ.சீ.சுகீஸ்வர அவசர கபில வர்ண எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை நீர்ப்பாசன திணைக்களத்தால் விடுக்கப்பட்ட இந்த அவசர எச்சரிக்கை அறிவித்தலின் படி நேற்று முன்தினம் 25 ஆம் திகதி முதல் மகாவலி நீரேந்து பகுதிகளில் பெய்துவரும் கடும் மழையினால் இவ் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நேற்று முன்தினம் இரவு முதல் மழை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்த துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

மேற்படி துறைகளில் அரச துறையின் நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புகள், அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டு முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வலயப் பிரதானி டகியோ கொனிஷே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தகபுமி கடோனோ, ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட நிபுணர் சந்தோஷ் பொகரெல் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சமந்த பண்டார, நிதி அமைச்சின் பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# பாலின வன்முறைகளுக்கு எதிரான 16 நாட்கள் ஆரம்பம்

பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான 16 நாட்கள் கொண்ட நிகழ்ச்சித் திட்டம்' கொழும்பு நகர மண்டபத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'பாலின அடிப்படையிலான வன்முறை இல்லாத இலங்கையை நோக்கி: அனைவருக்கும் பாதுகாப்பான பொது இடைவெளி' என்ற தொனிப்பொருளில் இந்த வருடம் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய பங்கேற்றிருந்தார்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளை இல்லாமல் செய்தல் மற்றும் இலங்கைக்குள் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கும் பொது இடங்களை உருவாக்குவதன் தேவை குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பல்துறை சார்ந்தவர்களின் ஒத்துழைப்பு மற்றும் கொள்கை அமுலாக்கத்தின் ஊடாகத் பாலினஅடிப்படையிலானவன்முறைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார். இதற்கென கூட்டு செயற்பாடுகளின் முக்கியத்துவம் தொடர்பிலும்விசேடமாககருத்து தெரிவித்த பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாலினஅடிப்படையிலானவன்முறைகள் அற்ற இலங்கை என்ற நோக்கமானது, அனைத்து பிரஜைகளுக்கும் பாதுகாப்பான இடத்துடன் ஆரம்பமாகிறது. குறித்த நிகழ்ச்சித் திட்டம் வெறுமனே அடையாளம் மாத்திரம் அல்ல. மாறாக, பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பதற்கு நிரந்தரமான நடவடிக்கை எடுக்க அனைத்து பிரஜைகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென' அவர் தெரிவித்தார்.

வன்முறைகளுக்கு எதிரான கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட செய்திகள் உள்ளடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் சுதந்திர சதுக்கத்திலிருந்து கொழும்பு மாநகர சபை வரை விழிப்புணர்வு பேரணியொன்றும்இடம்பெற்றமைநிகழ்வின் முக்கிய அம்சமாகும். இந்த பேரணியின் ஊடாக ஒத்துழைப்பு அடையாளப்படுத்தப்பட்டதுடன் பாதுகாப்பான பொது இடத்திற்கானஉடனடி தேவை தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டது.

ஆளும்தரப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், தனியார் பிரிவினர் மற்றும் சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட முக்கிய தரப்பினர் நிகழ்ச்சித் திட்டத்தின்இலக்குகள்தொடர்பில்அவர்களின் அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தி பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான குறைந்த சகிப்புத்தன்மை கொள்கையை கடைபிடிப்பதற்கான கூட்டு வாக்குறுதியை வழங்கினர். 16 நாட்கள் கொண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் உத்தியோகபூர்வ ஆரம்பத்தை குறிக்கும் வகையில் கொழும்பு மாநகர சபை கட்டிடம் செம்மஞ்சல் நிறத்தில் ஒளியேற்றப்பட்டிருந்தது. புடீஏ முடிவுக்கு கொண்டு வருவதற்கான நாட்டின் அர்ப்பணிப்புக்களை உத்வேகத்துடன் நினைவூட்டும் வகையில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் அரச பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள், இராஜதந்திரிகள், சிவில் சமூக செயற்ப்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அமைச்சுக்களின் விவரம் வர்த்தமானியில் வெளியீடு

அமைச்சர்களின்விடயதானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 44ஆம் பிரிவின் (01) உப சரத்தின் படி அமைச்சர்கள் மற்றும் அமைச்சுகளின் எண்ணிக்கை அதில் அமைச்சர்களுக்கான விடயதானங்கள், செயற்பாடுகள் மற்றும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

24 அமைச்சுப்பதவிகளுக்கான விடயதானங்கள், செயற்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் இந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதாககுறிப்பிடப்பட்டுள்ளது.

# கண்டியில் 250 மி.மீ. மழை சிவப்பு அறிவிப்பு எச்சரிக்கை

கடந்த24மணித்தியாலங்களில் 250மில்லிமீற்றருக்கும்அதிகமான கடும் மழை பெய்து வருவதால், கண்டி மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாத்தளை மாவட்டத்தில் 09 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கும் மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

மழை தொடர்ந்தால் நிலச்சரிவுகள், மண்மேடு இடிந்து விழுதல், மற்றும் பாறைகள் விழுதல் ஆகியவற்றை தவிர்க்க பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

கண்டி மாவட்டம் - ஹாரிஸ்பத்துவ, மெததும்பர, கங்கவட கோரலய, உடுதும்பர, தொலுவ, யட்டிநுவர, உடபலாத, பாததேஹவஹட, உடுநுவர, பாததும்பர, தெல்தொட்டை மாத்தளை மாவட்டம் - உக்குவெல, யடவத்த, ரத்தோட்ட, வில்கமுவ, அம்பங்கங்க கோரலய, லக்கல, பல்லேகம, பல்லேபொல, நாவுல, மாத்தளைநுவரெலியா - வலப்பனை ஆகிய இடங்கள் ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# பிணைமுறி மறுசீரமைப்புப் பணி புதிய முறிகள் மூலம் ஆரம்பமாகும்

## நிதி அமைச்சு அறிவிப்பு

இலங்கையின் சர்வதேச இறையாண்மை பத்திரங்களின் (பிணை முறி) மறுசீரமைப்பு தற்போதுள்ள பத்திரங்களுக்கு புதிய பத்திரங்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் ஆரம்பிக்கப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி, நிலுவையில் உள்ள பத்திரங்களின் மதிப்பு 12.55 பில்லியன் டொலர், அதன்படி பத்திரங்கள் மறுசீரமைக்கப்படும்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இன்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஏற்கனவே உள்ள பத்திரங்களை வைத்திருப்பவர்கள் புதிய பத்திரங்களுடன் தங்கள் பத்திரங்களை மாற்றிக்கொள்ள 3 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் இறுதித் திகதி டிசம்பர் 12 ஆகும். பத்திரப் பரிவர்த்தனை நடவடிக்கையில் விரைவில் இணையுமாறு சம்பந்தப்பட்ட பத்திர வைத்திருப்பவர்களை இலங்கை கோரியுள்ளது.

புதிய கருவிகளின் பிரத்தியேகங்கள் குறித்து இரண்டு ஆண்டுகளாக பத்திரப்ப திவுதாரர்களுடன் நல்லெண்ணத்துடன் கலந்துரையாடப்பட்டதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகலதரப்பினரும்சிறந்த பெறுபேறுகளைப் பெறும் வகையில் இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதே இதன் நோக்கமாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

செப்டம்பர் 19, 2024 அன்று இரண்டு பத்திரதாரர்களுடன் கொள்கை ரீதியான ஒப்பந்தம் எட்டப்பட்டது. ஒரு பக்கம் சர்வதேச பத்திரங்களை வைத்திருக்கும் சர்வதேச முதலீட்டாளர்களைக் கொண்டுள்ளது, மற்றொரு பக்கம் உள்நாட்டு நிதி நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

நிலுவையில் உள்ள பத்திரங்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவை மேற்படி இரு தரப்பினரிடமும் காணப்படுகின்றன.

மேலும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கையின் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு புதிய முறைகள் இலங்கையில் நடைமுறையில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அளவுருக்களுடன் இணக்கமாக இருப்பதாக அங்கீகரித்துள்ளன.

பத்திர மறுசீரமைப்பு வெற்றிகரமாக முடிவடைந்தமை சர்வதேச இறையாண்மைக் கடனின் நிலைத்தன்மையை உறுதி செய்வதோடு நாட்டின் பொருளாதாரத்தின் மீட்சியை விரைவுபடுத்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இலங்கையில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் பங்குகொள்ளுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனியார் துறை கடன் வழங்குனர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

மிகவும் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பின்னணியை உருவாக்குவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இலங்கையின் நிலுவையில் உள்ள சர்வதேச இறையாண்மை பத்திரங்களில் சுமார் 12 சதவீதம் சொந்தமாக உள்ள உள்ளூர் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கூட்டமைப்பு, இலங்கையின் சர்வதேச இறையாண்மை பத்திரங்களின் மறுசீரமைப்பு செயல்முறைக்கு தாங்களும் உடன்படுவதாக குறிப்பிடுகிறது.

# மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகள் திறக்கப்பட்டன



(கேதீஸ்)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்தமையால்தலவாக்கலை மேல்கொத்மலைநீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) திறக்கப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்தமையால் இரண்டு வான்கதவுகளைத் திறக்க நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் அதிகரிக்கும் பகுதிகளில் சில நாள்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக நீர்த்தேக்கத்தின்ஐந்து வான் கதவுகளில் இரண்டைத் திறக்க பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் கீழ் பகுதியில் உள்ள கொத்மலை ஓயா நீர்த்தேக்கத்தின் வடிகால் திறந்து விடப்பட்டுள்ளதால் அதனை அண்மித்து காணப்படும் குடியிருப்பாளர்கள் மிக அவதானமாகஇருக்குமாறுநுவரெலியா மாவட்ட அனர்த்தமுகாமைத்துவ பிரிவு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து நீர்த்தேக்கத்தின்கீழ்பகுதியிலுள்ள செண்கிளையார்நீர்வீழ்ச்சியிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.



# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து முன்னாள் எம்.பி திலீபன் வெளியேறினார்



முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா நிர்வாக செயலாளருமான குலசிங்கம் திலீபன் கட்சியில் இருந்தும் அதன் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் வெளியேறுவதாக நேற்று (திங்கட்கிழமை) அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் அரசுக் கட்சியில் ஆரம்பித்த எனது அரசியல் பயணம், பின்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) உடன் இணைந்து தொடர்ந்தது. கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளராக பொறுப்பேற்று மக்கள் பணியாற்றினேன். மேலும், 2020 இல் நடைபெற்ற தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகினேன்.

தற்போது நடைபெற்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகள் கிடைக்கப்பெற்றன. இதுவரை, காலமும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவையாற்றினேன்.

சில விடயங்கள் காரணமாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து விலகுகிறேன். இது தொடர்பான கடிதத்தை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன்.

இந்தக் கட்சியில் இருந்து நான் வெளியேறுவதற்கு, கட்சியோ அல்லது கட்சியின் தலைமையோ காரணமில்லை. எனது தனிப்பட்ட முடிவு என்பதை தெரிவித்துள்ளேன்.

- என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

# வீதியில் நின்ற வாகனங்கள் மீது பரந்தனில் சரிந்து வீழ்ந்தது மரம்





பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் சுண்டிக்குளம் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது வீதியில் நின்ற மரம் வேருடன் சாய்ந்ததில் வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுமின் இணைப்புக்களும் சேதமடைந்துள்ளன .

இதன் காரணமாக சிறிது நேரம் போக்குவரத்துதடைபட்டது போக்குவரத்து பொலிஸார் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் இணைந்து குறித்த மரத்தை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (113)



# உயிரிழந்த முதலைகளால் மக்கள் கடுமையாக அச்சம்

## அம்பாறையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் வெள்ள நீரில் இறந்த நிலையில் முதலைகள் கரை ஒதுங்கியுள்ளன.

குறித்த முதலைகள் நேற்று இறந்து கரையொதுங்கியமை பொதுமக்கள் மத்தியில் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் முதலைகள் பல அண்மைக்காலமாக காணப்பட்டன. மேலும் இப்பாலத்தை அண்டிய பகுதிகளில் சுமார் 30 இற்கும் அதிகமான முதலைகள் காணப்பட்ட போதிலும் தற்போது 10 முதல் 15 வரையிலான முதலைகளே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 7 அடி முதல் 8 மற்றும் 9 அடி முதலைகள் தற்போது இறந்த நிலையில் நீரில் மிதந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது அங்கு பெய்து வரும் அடைமழை காரணமாக பல முதலைகள் இறந்த நிலையில் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.இதனால் இப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் அப்பகுதியால் பொதுமக்கள் சிரமத்துடன் பயணம் செய்வதாக பிரதேச செய்தியாளர் பாறுக் ஷிஹான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# சட்டங்களின் தவறான பயன்பாட்டுக்கு தங்கள் ஆட்சியில் இடமே இல்லையாம்

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல உறுதிபடக் கூறுகிறார்




சட்டங்கள் துஷ்பிரயோகப் படுத்தப்படுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. நாட்டை அழிக்கும் பாதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை முற்றாக ஒழிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதாகும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

திங்கட்கிழமை பிரதி அமைச்சராக தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்ட போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட பலவீனமே கடந்த காலங்களில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்ததில் செல்வாக்கு செலுத்தின. நாட்டில் போதியளவு சட்டங்கள் நடைமுறையிலுள்ளன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. அது மாத்திரமின்றி சட்டங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. நாட்டை அழிக்கும் பாதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை முற்றாக ஒழிக்க வேண்டிய பொறுப்பு எமது அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது.

இவற்றை ஒழிப்பதற்கு அரசியல் ரீதியில் காணப்பட்ட தடைகள் தற்போது நீங்கியுள்ளன. எனவே இனியும் நாட்டில் சட்ட விரோத போதைப்பொருள்கள் இவ்வாறான காரணிகளால் கைப்பற்றப்படவில்லை எனக் காரணம் கூற முடியாது. அப்பாவி மக்களுக்கு நியாயத்தை வழங்க முடியவில்லை எனில் நாம் பதவிகளை வகிப்பதில் பிரயோசனமில்லை. - என்றார்.



# மாவீரர்நாள் அனுஷ்டிப்பு வவுனியா உணர்வுபூர்வம்







வவுனியாகல்மடு இரண்டாம் படிவத்தில் திங்கட்கிழமை மாவீரர் நாள் அனுஷ்டிக்கப் பட்டதோடு மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கம் மற்றும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் குழுமம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயாரால் ஈகைச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. இதன் பின்னர் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வும் மலர் அஞ்சலியும் இடம்பெற்று இருந்தது.

# ரணில் அரசின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தையே தற்போதைய ஆளும்தரப்பும் முன்னெடுத்து வருகின்றது

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளை மாற்றியமைக்கப் போவதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டது. ஆனால், அந்த ஆணை காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில் -

வரியைக் குறைப்போம், வட் வரியைக் குறைப்போம், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் சர்வதேச நாணய நிதியத்தின் புதிய இணக்கப்பாட்டில் கையெழுத்திடுவோம் என கூறி மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டாலும், இறுதியில் மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே வீணாகிப்போயுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கப்பாடு கண்ட சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த மாட்டோம். இதனை மாற்றுவோம் எனத் தேர்தல் மேடையில் இந்த அரசாங்கம் கூறினாலும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தையே தற்போதைய அரசாங்கமும் முன்னெடுத்து வருகிறது.

இந்த உடன்படிக்கையை மாற்றியமைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் இன்று எந்த மாற்றங்களையும் மேற்கொள்ளாது செயற்பட்டு வருகிறது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் மாறினாலும், பழைய முறைமையே தொடர்ந்து வருகிறது. - என்றார்.

# கிளிநொச்சியில் கனமழையால் 248 குடும்பங்களுக்குப் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக 248 குடும்பங்களைச் சேர்ந்த 717 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவால் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பெறப்பட்ட புள்ளிவிவரத் தகவல்களில் குறித்த விடயம் பதிவாகியுள்ளது.

குறித்த பாதிப்புக்கள் தொடர்பாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பிரமந்தனாறு குளம் வான்பாயத் தொடங்கியிருப்பதால் பிரமந்தனாறு குளத்தின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir

# அரச திணைக்களங்களும் மழை வெள்ளத்தில் மூழ்கின

## வவுனியாவில் வீதிப் போக்குவரத்தும் தடை









வவுனியாவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக அரச திணைக்களங்கள் பலரும் நீரில் மூழ்கியதுடன் மன்னார் வீதி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டது. சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் கடும் மழை பெய்து வரும் நிலையில் வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களம், தாதியர் கல்லூரி, அரச சுற்றுலா விடுதி, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம் எனபன நீரில் மூழ்கியுள்ளதுடன், காமினி மாகவித்தியாலயம் முன்பாக வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் வீதி போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியாவைரவபுளியங்குளம் பகுதியிலும் வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதுடன், வவுனியாவின் பல பகுதிகளில் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களும் வெள்ள நீரில் மூழ்கின.

இதனையடுத்து, வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா பிரதேச செயலாளர், நகரசபைச்செயலாளர், மாவட்ட அனத்த முகாமைத்துவ பணிப்பாளர், இராணுவத்தினர் மற்றும் பொலிசார் வருகை தந்து குறித்த அரச அலுவலங்கள்,

திணைக்களங்கள் மற்றும் வீதிகளில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர். (100)

# உன்னிச்சைக் குளம் திறப்பு வவுணதீவு மக்கள் கவனம்

மட்டக்களப்பில் உள்ள பாரிய குளங்களில் ஒன்றான உன்னிச்சை குளம் நேற்றைய தினம் திறக்கப்பட்டுள்ளதனால் வவுணதீவு பிரதேச மக்களை அவதானத்துடன் இருக்குமாறு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

வவுணதீவுபிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட கரவெட்டி மற்றும் மகிழவெட்டுவான் பகுதிகளை சேர்ந்த மக்களையும் அத்தோடுதாழ்நிலபிரதேசங்களை சேர்ந்த மக்களையும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பிரதேசசெயலாளர்சத்தியானந்தி நமசிவாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உன்னிச்சை குளத்தின் மூன்று வான் கதவுகளும் 10 அடி வரை திறக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் நிரம்பி வருகின்றதனால் அப்பகுதியில் வசிக்கும் குடும்பங்களையும் அவதானத்துடன்செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவில்24குடும்பங்களை சேர்ந்த 91 நபர்கள் இதுவரை உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், இத் தொகையானது மேலும் அதிகரிக்கலாம் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# கிட்டங்கி பாலத்தில் நீர் பெருக்கெடுப்பு

## போக்குவரத்து செய்வோர் அவதானம்

கல்முனை பிரதான நகரத்தையும் நாவிதன்வெளியையும் இணைக்கும் கிட்டங்கி பாலத்தின் ஊடாக வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் அந்த வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உயர்தர பரீட்சைக்கு செல்கின்ற மாணவர்கள் மற்றும்கடமைக்கு செல்லுகின்ற மேற்பார்வை அதிகாரிகள் நேற்றுக்காலை இந்தப்பகுதியின் ஊடாக போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். கடற்படையினரின் உதவியோடு மேற்பார்வை அதிகாரிகள் பரீட்சை நிலையங்களுக்குச் சென்றனர்.

காரைதீவு - அம்பாறை பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் சம்மாந்துறை மாவடிப்பள்ளிபிரதானபாலத்தின் ஊடாக வெள்ளநீர் பாய்ந்து செல்கிறது. இதனால் அந்த வீதியுடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசங்களிலும் குறிப்பாக அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, கல்முனை, மருதமுனை, பெரியநீலாவணை நாவிதன்வெளி போன்றபல்வேறு தாழ்நிலை பிரதேசங்களும் வெள்ள நீரினால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் நேற்று ஒருவர் வெள்ளத்தில் அள்ளுண்டார்

சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பில்வெள்ளத்தில்ஒருவர்அடித்துச்செல்லப்பட்டுள்ளார். அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 161 குடும்பங்களைச்சேர்ந்த 522 பேர் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், பலபிரதேசங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. இந்தத் தொடர் மழையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதுடன் பல பிரதேசங்களில் வீதிகளில் உள்ள பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

பட்டிப்பளை, காத்தான்குடி, கோரளைப்பற்று, கிரான், மண்முனை வடக்கு, ஏறாவூர்பற்று செங்கலடி, பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 161குடும்பங்களைச் சேர்ந்த 522 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதேவேளை, வெள்ளத்தினால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையிலான போக்குவரத்தும், வவுணதீவுக்கும் மட்டக்களப்பு நகருக்கும் இடையிலான போக்குவரத்தும், கிரானுக்கும் புலிபாய்ந்தகல்பிரதேசத்துக்கும்இடையிலான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளிக்கும் மண்டூருக்குமான பிரதான தாம்போதிக்கு மேலால் வீதியை மூடி 4 அடி உயரத்தில் வெள்ள நீர் பாய்ந்து ஓடும் நிலையில், அதனைக் கடந்துக் செல்ல முற்பட்ட ஆண்ஒருவரை வெள்ளநீர் அடித்துச் சென்றதில அவர் காணாமல்போயுள்ளார்.

# பொதுத் தேர்தல் வேட்பாளர்களின் வரவு செலவு அறிக்கை கட்டாயம்

## தவறினால் சட்ட நடவழிக்கை

பொதுத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தங்களது வருமானம் மற்றும் செலவு அறிக்கையை குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாத வேட்பாளர்கள் மீது வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் -ஸ்ரீ ரத்நாயக்க மேலும்கருத்து வெளியிடுகையில்,

பொதுத் தேர்தல் நவம்பர் 14, 2024 அன்று நடைபெற்றது. 15ஆம் தேதி முடிவு வெளியானது. முடிவுகள் அறிவிக்கப்பட்ட 21 நாட்களுக்குள், குறித்த தேர்தலில் போட்டியிட்ட அனைத்து கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் உரிய வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், அந்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தங்களது வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கைகள் டிசம்பர் 6 அல்லது அதற்கு முன் அவர்கள் போட்டியிட்ட மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

டிசம்பர் 6 அல்லது அதற்கு முன் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும். என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் நகர பிரதேச செயலக பிரிவில் கனமழையால் 43 கிராமங்கள் பாதிப்பு

## உதவி நடவடிக்கைகள் விரைவு

மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 43 கிராமங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 623 பேர் கனமழை காரணமாக பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். மன்னாரில் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்டு வரும் அனர்த்தங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் திங்கள் கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் அவசரக்கூட்டம் அனைத்து திணைக்கள அதிகாரிகளுடன் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களக்கு தெரிவிக்கையில் -

மன்னாரில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக மன்னார் நகரம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும்பாலான மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மன்னார் நகரப் பிரதேசப் பிரிவில் 43 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளன. 12 ஆயிரத்து 469 குடும்பங்களைச் சார்ந்த 43 ஆயிரத்து 623 பேர் இந்த வெள்ளத்தால் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு நானாட்டான் பிரதேசப் பிரிவில் மூன்று கிராம அலுவலகப் பிரிவுகள் இந்த வெள்ளத்தால் பாதிப்டைந்துள்ளன. இதில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் 14 பாதுகாப்பு மையங்கள் உருவாக்கப்பட்டு 367 குடும்பங்களைச் சேர்ந்த 1248 பேர் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு முதலிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் தொடர் மழையிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படாதிருக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் மன்னார் நானாட்டான் பகுதியில் 16 இற்கும் மேற்பட்ட ஜேபிசி வாகனங்கள் மூலம் வெள்ளநீர் கடலுக்குள் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட தற்பொழுது செங்கால் குறைந்த தாழமுக்கம் இன்மையால் மன்னார் மாவட்டமும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலைமை இருப்பதால் இங்குள்ள அனைத்து திணைக்களங்களையும் அழைத்து செங்கால் தாழமுக்க நிலைமையை எவ்வாறு எதிர்கொள்வது என கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைவாக குறிப்பிட்ட நிலையிலிருந்து பாதிப்படையும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது மற்றும் கல்வி பொதுதராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை வெள்ளப் பெருக்கிலிருந்து பாதுகாத்து அவர்களை தகுந்த முறையில் பரீட்சையில் தோற்றுவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் தற்பொழுது உள்ள குறைந்த காற்றமுத்த நிலைமையை கருத்தில் கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்களை கடற்தொழிலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தலும் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய காலநிலை மாற்றம் காரணமாக 400 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. முன்னார் மாவட்டத்தில் சராசரியாகக் கிடைக்கும் மழைவீழ்ச்சியில் மூன்றிலொரு பங்களவான மழை வீழ்ச்சி இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு கிடைக்கும்போது இது மன்னார் மாவட்டத்தில் பெரும் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதைத்தடுப்பதற்குரியசகலஏற்பாடுகளையும் முப்படையினரும் பொலிஸாரும் மற்றும் இதனுடன் தொடர்புள்ள திணைக்களங்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்பொழுது மன்னார் மாவட்டம் இந்த வெள்ளப் பெருக்கைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டுளளது என்பதும் குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார்.

# வவுனியாவில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் பரீட்சை எழுதும் 2 ஆயிரத்து 420 மாணவர்கள்

க.பொத உயர்தரப் பரீட்சை நாடாளாவிய ரீதியில் நேற்று ஆரம்பித்துள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டு நேற்றையதினம் பரீட்சை செயற்பாடுகள் ஆரம்பித்திருந்தன.

இம்முறை உயர்தர பரீட்சைக்கு வவுனியாவில் 2420 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதுடன், அவர்களுக்காக 20 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 9 இணைப்புகாரியாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கடும்மழை பெய்து வருகின்றது. மழைக்கு மத்தியில் மாணவர்கள் பரீட்சைக்கு சென்றதுடன், மழையால் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(100)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2024இல் வெளியிடப்பெற்றது